දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவா ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )NCCP/GOSL/12/2019
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 20 /05/2019
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition& Indigenous Medicine

சுற்றறிக்கை கடித இலக்கம் : 01-79 /2019

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
சுகாதார மருத்துவ அதிகாரிகள்
அனைவருக்கும்,

**"உலக தலை மற்றும் கழுத்து புற்றுநோய் தினம் - 2019"**

2011 ஆம் ஆண்டிலே இலங்கையின் ஆண்களுக்கு ஏற்பட்ட புற்றுநோய் வகைகளில் வாய்வழி புற்றுநோய் முதலிடம் வகித்ததுடன், (ஆண்களுக்கு ஏற்பட்ட அனைத்துப் புற்றுநோய் வகைகளில் ஏறத்தாழ 18% சத வீதம்) பெண்களுக்கு ஏற்பட்ட புற்றுநோய் வகைகளில் அது ஏழாவது இடம் வகிக்கின்றது. இலங்கையில் வருடாந்தம் புதிதாக கண்டறியப்படுகின்ற வாய்வழி புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2000 ஆகும். 2011 ஆம் ஆண்டிலே ஆண்கள் மற்றும் பெண்களின் வயது தரப்படுத்தப்பட்ட புதிய வாய்வழி புற்றுநோய் பாதிப்பு வீதமானது (age standardized incidence rates) சனத் தொகையில் 100,000 பேருக்கு முறையே 16.4 மற்றும் 4.1 ஆகும். அத்துடன் அனைத்து புற்றுநோய் வகைகளிலும் வாய்வழி புற்றுநோய் மூலமே அதிக மரண வீதம் பதிவாகி இருப்பதுடன் அது நாளொன்றிற்கு 2-3 வரையிலாகும்.

வெற்றிலை சாப்பிடுவதை நிறுத்துதல், புகையிலை மற்றும் பாக்கு சார்ந்த உற்பத்திகளின் பாவனையை நிறுத்துதல், புகை பிடித்தல் மற்றும் மதுபான பாவனையை கைவிடல் என்பவற்றின் மூலம் வாய்வழி புற்றுநோயை தடுத்துக்கொள்ள முடியும். அதனால் பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், வாய்வழி புற்றுநோய் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ள குழுக்களை பரிசோதனை செய்தல் என்பவற்றின் ஊடாக வாய்வழி புற்றுநோயை தடுத்துக்கொள்ள முடியும். வாய்வழி புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிவதன் மூலம் அதனை குணப்படுத்த முடியும். ஆரம்ப

வாய்வழி புற்றுநோய் சந்தர்ப்பத்தின் போது நோயை இனங்கண்டு உரியவாறு நோய் முகாமைத்துவம் செய்வதன் மூலம் வாய்வழி புற்றுநோய் ஏற்படுவதை தடுத்துக்கொள்ள முடியும்.

வாய்வழி புற்றுநோயை தடுப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகளை பயன்படுத்திய போதிலும், அதிகமான வாய்வழி புற்றுநோயாளர்கள் நோயின் இறுதி கட்டத்திலேயே கண்டறியப்படுவதனால் அந்த நோயாளர்களின் மரண வீதமானது உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டிலே வெளியிடப்பட்ட புற்றுநோய் பற்றிய புதிய தரவு அறிக்கையின் பிரகாரம் வாய்வழி புற்றுநோயாளர்களில் ஏறத்தாழ 76.5% சத வீதத்தினர் புற்றுநோயின் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களின் போதே சுகாதார நிலையங்களை நாடியுள்ளனர். இதற்கான பிரதான காரணமாக ஆபத்தான குழுக்களை உரியவாறு கண்டறிய முடியாமல் போதல், புற்றுநோயை ஆரம்பத்திலும் அதன் பின்னரும் கண்டறிவதற்கான பரிசோதனைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் பொது மக்களுக்கு வாய் புற்றுநோய் பற்றிய அறிவின்மை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தலை மற்றும் கழுத்து புற்றுநோய்களின் பயன்மிக்க சிகிச்சைகள் மற்றும் கட்டுப்பாடு என்பன பற்றி கவனம் செலுத்துவதற்கு சர்வதேவ தலை மற்றும் கழுத்து புற்றுநோய்கள் பற்றிய தினமானது ஒவ்வொரு வருடத்திலும் யூலை மாதம் 27ஆம் திகதி உலகம் முழுவதிலும் நினைவுகூரப்படுகின்றது. தலை மற்றும் கழுத்து புற்றுநோய்களில் முதலிடம் வகிப்பது வாய்வழி புற்றுநோய்களாகும்.

ஆரம்ப வாய்வழி புற்றுநோய் மற்றும் வாய்வழி புற்றுநோய் என்பவற்றிற்கான ஆபத்தான காரணிகள் தொடர்பான பொது மக்களின் அறிவினை விருத்தி செய்யும் பொருட்டு மற்றும் ஆபத்தான குழுக்களை ஆரம்ப வாய்வழி புற்றுநோய் மற்றும் வாய்வழி புற்றுநோய் என்பவற்றிற்காக நடாத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் பக்கம் கவனம் செலுத்த வைக்கும் பொருட்டு யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துமாறு தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமானது அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கின்றது. அதற்காக பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவ அதிகாரி (திட்டமிடல்), மருத்துவ அதிகாரி (தொற்றாத நோய்கள்), சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் செயல்முறை பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**உங்களது பிரதேசத்தில் தொழிற்படுத்தக் கூடிய செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

1. மாகாணத்தின் அல்லது மாவட்டத்தின் வளவாளர்களின் (உதாரணமாக: வாய்வழி மற்றும் முக அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள்) பங்கேற்புடன் சுகாதார மருத்துவ அதிகாரிகள், ஆரம்ப சுகாதார சேவைகளில் பணியாற்றுகின்ற மருத்துவ அதிகாரிகள் மற்றும் தனியார் சேவையில் பணியாற்றுகின்ற மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கான விரிவுரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10, 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

2. வாய்வழி புற்றுநோய் தொடர்பான ஆபத்தான காரணிகளை இனங்காணல் பற்றி விசேட கவனம் செலுத்தி ஆரம்ப சுகாதார சேவை அதிகாரிகளுக்காக நடாத்துகின்ற சேவைக்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

3. பாடசாலைகள், மாவட்டச் செயலகங்கள், மாகாண / வலய கல்விப் பணிப்பாளர் பணிமனைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் தலைவர்கள் சார்பாக ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

4. அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பதவியணியினருக்கு வாய்வழி புற்றுநோய் தடுப்பு மற்றும் ஒழிப்பு தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

5. வாய்வழி புற்றுநோய் தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் முகமாக பொது மக்கள் ஒன்றுகூடுகின்ற இடங்களில் (உதாரணமாக : புகையிரத நிலையங்கள், பஸ் தரிப்பிடங்கள், பொது சந்தைகள் - ஞாயிறு சந்தை என்பவற்றில்) பாத யாத்திரைகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்க செய்தல். அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை அரச சார்பற்ற அமைப்புக்கள், சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் சங்கங்கள் உள்ளிட்ட சமூக அமைப்புக்களின் ஊடாக தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அறிமுகம் செய்தல்.

6. பல் சிகிச்சை நிலைய்ங்கள், சுகநல சிகிச்சைகள் மற்றும் நடமாடும் சிகிச்சைகளின் போது வாய்வழி புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினால் பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ள துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்ற சுகாதாரக் கல்விக் கருவிகளை பயன்படுத்த முடியும். தலை மற்றும் கழுத்து புற்றுநோய் தினம் தொடர்பாக உங்களது பிரதேசத்தில் / நிறுவனத்தில் நடாத்தப்பட்ட தொழிற்பாடுகள் பற்றிய அறிக்கை ஒன்றினை புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளருக்கு 2019 ஒக்தோபர் மாதம் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுத் தருமாறும் வேண்டிக் கொள்கின்றேன்.

இலங்கையில் காணப்படுகின்ற வாய்வழி புற்றுநோய் அபாயத்தைக் குறைத்துக் கொள்ளும் நோக்குடன் இதற்கு வசதியளிப்பதற்கும் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாகாண மற்றும் பிராந்திய சுகாதார அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இத்தேசிய முக்கியத்துவமிக்க பணியை வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு உங்களது தலைமைத்துவம், ஆலோசனை மற்றும் தொழிற்படு பங்களிப்பு என்பவற்றினை முக்கியமாக எதிர்பார்க்கின்றேன்.

இது பற்றிய மேலதிக விளக்கம் தேவைப்படின் தயவு செய்து தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளருடன் அல்லது அதன் சமூக பல் மருத்துவ நிபுணருடன் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இலக்கம் : 0112368627 )

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

**டாக்டர் அனில் ஜாசிங்க**
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

அனைத்து மாகாண சுகாதார அமைச்சர்களுக்கும்
அனைத்து மாகாண சுகாதார செயலாளர்களுக்கும்
அனைத்து பிரதிப் பணிப்பாளர் நாயகங்களுக்கும்
பணிப்பாளர், தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொற்றாத நோய்கள்)
பணிப்பாளர், பல் மருத்துவ சேவைகள்
பணிப்பாளர், ஆரம்ப மருத்துவ சேவைகள்
பணிப்பாளர், தாய் சேய் சுகாதாரம்
பணிப்பாளர், சுகாதார மேம்பாட்டுப் பணியகம்
மாகாண சமூக மருத்துவ நிபுணர்கள், சமூக பல் மருத்துவ நிபுணர்கள்
பிரதான மருத்துவ அதிகாரி (பாடசாலை சுகாதாரம்)
அனைத்து பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும்
அனைத்து மருத்துவ அதிகாரிகளுக்கும் (தொற்றாத நோய்கள்)
அனைத்து மருத்துவ அதிகாரிகளுக்கும் (தாய் சேய் சுகாதாரம்)
அனைத்து மருத்துவ அதிகாரிகளுக்கும் (திட்டமிடல்)